# ஞான விசாரம்

## காப்பு

சொல்லாமற் சொலிய தத்துவமமிதை
வாணியின் ஆணை சொல்லாக்க
இணையில் ஆனை நன்றாக்கவே.

## செய்யுள்

உலகம் மாயை அதுவே உண்மை
உலகும் அதுவே இதுவே உண்மை.

இதனை அறிந்திட மனந்தன் பிறப்பிடம்
அதனை தெரிந்திட நானார் கேட்டுப்பார்.

நானார் கேட்டால் ஆடுசவமில் தெளியும்
வேறார் கேட்டால் ஆடாசிவமே தெரியும்.

இதைத்தன்னை கேட்டால் தோணுமே பந்நினைப்பும்
நினைத்தானை நினைத்தால் மாயுமே அந்நினைப்பும்.

நினைவாறு வற்றினால் இல்லயத்தை பார்ப்பானார்
இக்கேள்வி பற்றினால் உள்ளத்தே மனதடங்கும்.

மனதடங்க மனதடங்க வாசனையவை ஒழியும்
யாவையும் அழிந்தபின் நான்,நானது ஒலிக்கும்.

இச்சுபூரணம் பூரணத்தே, நான்,நானும் அதன்மூலத்தே
சேர்தருணம் நானழிந்தே தான்,தானாய் நிற்க்கும்மே.

சரணமடை பக்தர்க்கு அவ்வருணகிரி ரமணன்
மரணமடை மனத்திர்க்கு இச்சுலபவழி கூறினன்.

நேர்வழியும் மலைவழியாம் ஞான விசாரமதைத்தினம்
சேர்வோரும் அவனருளால் மோன மாவருதுதிண்ணம்.

## குருவந்தனம்

ஆலடி அமர்ந்தவன் முதலே
காலடி ஜனித்தவன் நடுவாய்
சோணகிரி மைந்தன் முடியும்
மோனகுரு பரம்பரை பணிவாம்.

(இக்குருவந்தனவரி காவ்யகண்ட ஸ்ரீ கணபதி முனிகள் ஆரியத்திற் செய்ததைத் தழுவியதாம்.)